2003 ஏப்ரல் 8]

நகராட்சிப் பகுதிகளில் உள்ள வறட்சிப் பகுதிகளுக்கு நிறைவாக குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கிற எண்ணத்தில் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் ரூ.15 கோடியே 16 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக நடைபெறுகிற எந்தத் திட்டப் பணிகளாக இருந்தாலும் சரி, உடனடியாக அதற்கு முன்னுரிமை கொடுத்து நிறைவேற்ற வேண்டும், பொதுமக்களுக்கு நிறைவாக முழுமையான குடிநீர் வழங்க வேண்டும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்பதுதான் தமிழக அரசின் மாண்புமிகு அம்மா அவர்களுடைய உறுதியான உத்தரவு என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 212, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

212—

கயிறு தொழிற்சாலை

***17234—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் தேங்காய் நார் கயிறு திரிக்கும் தொழிற்சாலைத் தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் தேங்காய் நார் கயிறு திரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வினா எண் 213, திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

213—

வனத் துறையின் அனுமதி

***19093—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனியில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு வனத் துறைக்குச் சொந்தமான இடத்தை ஒதுக்கீடு செய்வதற்கு வனத் துறையின் அனுமதி பெற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

வனமற்ற பிற வேலைக்கு வனநிலம் பயன்படுத்தப்பட வேண்டுமெனில், வனப்பாதுகாப்புச் சட்டம் 1980-ன் படி, மத்திய அரசின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். தேனி நகரில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்காக, தேனி வனக்கோட்டம், வால்கரடு காப்புக்காட்டுப் பகுதியிலிருந்து 9 ஏக்கர் வனநிலத்தை தேனி அல்லிநகரம் நகராட்சிக்கு வழங்குவதற்காக, வனப்பாதுகாப்புச் சட்டம், 1980, பிரிவு 2-ன்படி மைய அரசின் ஒப்புதலைப் பெற, முதன்மை தலைமை வனப்பாதுகாவலரிடமிருந்து பெறப்பட்ட கருத்துரு, மைய அரசுக்கு அனுப்பப்பட்டு, அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். விவா அறிக்கையினைப் படித்தேன். தேனி மாவட்டம் தலைநகரமாக விளங்குவதாலும், தமிழகத்திலே கோயம்புத்தூருக்கு அடுத்தபடியாகத் தொழில் நகரமாக விளங்குவதாலும், ஏற்கெனவே